சென்னை முதன்மைக் கல்வி அலவலரின் செயல்முறைகள், சென்னை-08

ந.க.எண்.2625 /ஈ3/2022-2 நாள்.07.04.2022

-----

பொருள்: குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் - 2022-2023 ஆம் கல்வியாண்டில் அனைத்துச் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளுக்கு நுழைவுநிலை வகுப்பில் (LKG/I Std) குறைந்தபட்சம் 25% ,இட ஒதுக்கீடு வழங்குதல் - சேர்க்கை நடைமுறைகள் பள்ளிகளுக்கு அறிவுரை வழங்கியது - ஆய்வு அலுவலர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் - தொடர்பாக

பார்வை:

1 குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 மற்றும் தமிழ்நாடு விதிகள், 2011.

2 அரசாணை (நிலை) எண்.60, பள்ளிக் கல்வித் (எக்ஸ்2) துறை, நாள்.01.04.2013.

3 அரசாணை (நிலை) எண்.59, பள்ளிக் கல்வித் (பொநூ 2) துறை, நாள்.12.05.2014.

4 அரசாணை (நிலை) எண்.66, பள்ளிக் கல்வித் (பொநூ 2) துறை, நாள்.07.04.2017.

5 சென்னை-06, குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட மாநில முதன்மைத் தொடர்பு அலுவலர் மற்றும் தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.1476/இ1/2022 நாள்.06.04.2022.

---------

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 பிரிவு 12(1) (C இன்படி அனைத்துச் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளுக்கு நுழைவுநிலை வகுப்பில் (LKG/I Std) குறைந்தபட்சம் 25% ,இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும்.

இதனை நடைமுறைப்படுத்துவதற்கு பார்வையில் உள்ள அரசாணைகளில் விரிவான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன. அவ்வழிகாட்டுதல்களைப் பின்பற்றி 2013-2014 முதல் 2021-2022 ஆம் கல்வியாண்டு வரை மாணாக்கர் சேர்க்கை செய்யப்பட்டு பயனடைந்துள்ளனர். சட்டத்தின் நோக்கம் முழுமையாக நிறைவேறும் வண்ணமும், வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகள் அதிக அளவில் பயன் பெறும் வண்ணமும், வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யும் பொருட்டும் பார்வை 4-இல் உள்ள அரசாணையில் கூடுதல் வழிகாட்டுதலும், திருத்திய கால அட்டவணையும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இப்பொருள் சார்பாக பார்வை 1 முதல் 4 வரை காணும் அரசாணைகளின் அடிப்படையில் பார்வை (5) இல் காணும் செயல்முறையினில் தெரிவிக்கப்பட்டுள்ள பின்வரும் அறிவுரைகளை பின்பற்றி செயல்பட ஆய்வு அலுவலர்களான சென்னை மாவட்ட அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள், உதவித்திட்ட அலுவலர் (சமக்ரக சிக்ஷா) மற்றும் அனைத்து வட்டாரக்கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் நுழைவு நிலை வகுப்பில் (எல்.கே.ஜி அல்லது 1 ஆம் வகுப்பு) பள்ளி வாரியாக உள்ள மொத்த இடங்கள் மற்றும் அவற்றில் 25 விழுக்காடு இடங்கள் ஆகிய விவரங்களை இணையதளம் கல்வி மாவட்ட, வட்டார அளவில் உள்ள அனைத்துக் கல்வி அலுவலக தகவல் பலகைகள் ஆகியவற்றில் அறிவிப்பு செய்ய வேண்டும். இவ்விவரம் பள்ளிகளில் அறிவிப்பு செய்யப்பட்டுள்ள விவரத்தினை உறுதி செய்திட வேண்டும்.
2. சட்டப்பிரிவு 12(1) (சி) இன் கீழ் சேர்க்கை வழங்க, தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011, விதி எண்.4(1) இன்படி எல்.கே.ஜி அல்லது முதல் வகுப்பிற்கு அருகாமையிடம் என்பது 1 கிலோ மீட்டம் ஆகும்.
3. சட்டப்பிரிவு 12(1) (சி) இல் சேர்க்கை கோரும் குழந்தைகளின் பெற்றோர் பள்ளிக் கல்வித் துறையின் இணையதளத்தில், இணைய வழியாக விண்ணப்பிக்கலாம். இணையதள முகவரி rte.tnschools.gov.in
4. பெற்றோர்கள் இணைய வழியாக எங்கிருந்து வேண்டுமானாலும் விண்ணப்பிக்கலாம். மேலும், மாவட்டக் கல்வி அலுவலர்/ வட்டாரக் கல்வி அலுவலர் / ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வட்டார வள மைய அலுவலகங்களில், சேர்க்கைக்கான விண்ணப்பங்களை இணைய வழியில் விண்ணப்பிக்கத் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.
5. அந்தந்தப் பள்ளிகளில் விண்ணப்பங்கள் ஏதேனும் பெறப்பட்டால், சார்ந்த பெற்றோர்களுக்கு ஒப்புகைச் சீட்டு (அ.ஆ.(நிலை) எண்.60 பள்ளிக் கல்வித் துறை நாள்.01.04.2013 இல் உள்ள ஒப்புகைச் சீட்டில்) உடன் தவறாது வழங்கப்பட வேண்டும். இவ்விண்ணப்பங்களை பள்ளியிலேயே இணைய வழியில் பதிவேற்றம் செய்யலாம் அல்லது அருகில் உள்ள வட்டார வள மையங்கள் / வட்டாரக் கல்வி அலுவலர் / மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகங்களில் இணைய வழியில் பதிவேற்றம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
6. ஒவ்வொரு தனியார் சுயநிதிப் பள்ளியிலும், தகவல் பலகையில் அந்த பள்ளிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள இடங்களை குறிப்பிட்டு 13.04.2022 அன்று 12(1) (சி) இன் கீழ் 25% சேர்க்கைக்கான விண்ணப்பங்களை விண்ணப்பிக்க அறிவிப்பு வெளியிட வேண்டும். இவ்விவரத்தினை உறுதி செய்திட வேண்டும்.
7. 13.04.2022-க்குப் பிறகு எக்காரணத்தைக் கொண்டும் பள்ளிகளின் நுழைவுநிலை வகுப்பிலுள்ள (LKG/I) மொத்த இடங்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட 25% இடங்கள் எண்ணிக்கையை EMIS இணையதளத்தில் மாற்றம் செய்ய இயலாது எனத் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்படுகிறது.
8. 20.04.2022 முதல் 18.05.2022 வரை இணைய வழியாக விண்ணப்பிக்கலாம்.

9. இதன்பொருட்டு மேற்குறிப்பிட்டுள்ள அனைத்து அலுவலகங்களிலும், விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்யத் தேவையான அனைத்து வசதிகளும் செய்யப்பட வேண்டும். மேற்குறிப்பிட்டுள்ள 20.04.2022 முதல் 18.05.2022 வரை மேற்படி பத்தி 4 இல் குறிப்பிட்டுள்ள அனைத்து அலுவலகங்களிலும் இணைய வசதி, கணினி, சான்றுகளை பதிவேற்றம் செய்யத் தேவையான Scanner வசதி, கணினி இயக்குபவர் ஆகியவற்றை 18.04.2022 அன்றே தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். இவ்விவரத்தினை உறுதி செய்து முதன்மைக் கல்வி அலுவலகத்தில் சமர்ப்பித்திட வேண்டும்.

10. மாணவர்கள் சேர்க்கை பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே சென்றடையும் வகையில் அனைத்துச் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளிலும் பள்ளியின் பிரதான நுழைவு வாயிலில் (Main Gate) பொதுமக்களுக்கு நன்கு தெரியும் வகையில் பள்ளிப் பெயர் பலகைக்கு அருகிலும், பொதுமக்கள் பெருமளவில் கூடும் இடங்களிலும் 6"x10" அடி அளவில் கடந்த ஆண்டுகளில் வைக்கப்பட்டது போல் அனைத்து விவரங்களையும் உள்ளடக்கிய அறிவிப்புப் பலகை (Flex Board) வைக்கப்பட வேண்டும். பள்ளிப் பார்வையின் போது நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதை உறுதி செய்திட வேண்டும்.

11. பார்வை (4) இல் உள்ள அரசாணையின்படி 2022 - 2023 ஆம் ஆண்டிற்கான 25 % இட ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கை நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டு, வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகள் பயனடையும் வண்ணம் நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து ஆய்வு அலுவலர்களுக்கும் தெரிவிக்கலாகிறது.

முதன்மைக்கல்வி அலுவலர்

சென்னை.

07/04/22

பெறுநர்

1. அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்.
2. உதவித்திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, எழும்பூர், சென்னை-08.
3. அனைத்து வட்டாரக்கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்.

நகல்

1. இயக்குநர், தொடக்கக்கல்வி இயக்ககம், சென்னை-06 தகவலுக்காகப் பணிந்து அனுப்பப்படுகிறது.
2. இயக்குநர், மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம், சென்னை-06 தகவலுக்காகப் பணிந்து அனுப்பப்படுகிறது.